**ஊர்காவற்றுறை பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 23 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 28 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊர்காவற்றுறை பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு முன்னைய ஆண்டு செலுத்த வேண்டியுள்ள தொகை ரூபா 3,589,223 கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் திரண்டநிதி கணக்குகளில் கூடுதலாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி அலுவலர்களுடைய ஓய்வூதிங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 3,686,170 கணக்குக்கு கொண்டுவரப்படாமையினால் வருமானம் கணக்குகளில் கூடுதலாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) சபையிற்கு உரிமையில்லாத 3 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக்கணக்குகளுக்குக் கொண்டு வந்திருந்தமையினால் ரூபா 19,892,500 மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளது.

#### 1.3.2 செலுத்தவேண்டியவை

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டுவரை பின்னுரித்தாளிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் ரூபா 830,475 தீர்வு செய்யப்படாமல் வைப்பிலிடப்பட்டுள்ளது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக விதிகள் அத்தியாயம் II விதி 4 | வீதவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 3,855,756 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 4,129,285 ஆக இருந்ததுடன் செலவினங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமையினால் நிதிவிளைவு ரூபா 273,529 குறைவடைந்துள்மையை காட்டுகின்றது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 30,909,742 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 31,589,172 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 679,430 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமான நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | | |
|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வரிகள் | - | - | - |
| குத்தகை வாடகைகள் | 2,259 | 1,899 | 6 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 290 | 365 | - |
| ஏனைய வருமானங்கள் | 36,511 | 30,587 | 5,776 |
| | **39,060** | **32,851** | **5,782** |

**2.3.2 வாடகைகள்**

சபைக்குச் சொந்தமான 04 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாமலுள்ளது.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

(அ) மீளாய்வாண்டுக்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 57,150 பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 4,355,431 முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

சபையின் எல்லைக்குள் திண்மக்கழிவுச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 284 தொடக்கம் ரூபா 4,023,712 வரையான வேறுபாடு காணப்பட்டுள்ளது.

**4.2 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்**

சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

**4.3 சொத்து முகாமைத்துவம்**

(அ) ரூபா 885,000 பெறுமதியான வாராந்தச் சந்தை பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

(ஆ) சபைக்குச் சொந்தமான தேவரதம் படகு 02 வருட காலமாகப் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வாகனப் பதிவேடு
(ஆ) வீதவரி அறவீடு